**S.C. 323 /2017**

**P.W.3 திருமதி.மலர்விழி, 24.06 .2019**

**எதிரிகள் தரப்பில் கு.வி:**

இதற்கு முன் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தது நினைவிருக்கிறதா என்றால் இருக்கிறது. எனக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது. என் தந்தை சொல்லி தெரிந்துகொண்டேன். இறந்து போன எனது கணவருக்கு பெங்களூரில் வீடுகள் உள்ளன. மதுரையில் உள்ள வீடு எனது கணவர் திருமணத்திற்கு முன்பே வாங்கிவிட்டார். அது என் கணவர் பெயரில் உள்ளது. எனது கணவர் எனது பேச்சை மீறித்தான் 1வது எதிரியை திருமணம் செய்தார். 1வது எதிரி மதுரையில் வீடு பால் காய்ச்சிய போது எனது கணவரைத் தவிர நானோ எனது குடும்பதாரோ மதுரைக்கு வரவில்லை. எனக்கு முதல் முதலாக தகவல் கிடைத்த போது எனது கணவரை 1வது எதிரியும் மற்றவர்களும் சேர்ந்து கொலை செய்துவிட்டார்கள் என்றும் அனைவரும் காவல் நிலையத்தில் இருப்பதாகவும் தகவல் வந்தது. எனது கணவர் செல்போன் வைத்திருந்தார். அந்த செல்போனை சம்பவத்திற்கு பிறகு நான் பார்க்கவில்லை. பெங்களூரிலிருந்து மதுரைக்கு வரவேண்டுமென்றால் சுமார் 8.00 மணிநேரத்திலிருந்து 10.00 மணி நேரமாகும் என்றால் சரிதான். சம்பவம் பற்றி கேள்விப்பட்டவுடன் இரவு 12.00 மணிக்கு மேல் பெங்களூரிலிருந்து கிளம்பினோம் மதுரைக்கு காலை 8.00 மணிக்கு வந்து இறங்கினோம். நான் போலிசார் விசாரணையில் ஆறு மாதத்திற்கு ஒருமுறை மதுரை வீட்டில் தங்கி செல்வோம் என்று கூறியுள்ளேன். குடும்பத்தில் சிறிய சிறிய பிரச்சனை வரும் அதை நான்தான் சமாளித்து வருவேன் என்று விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். இங்கே வந்த பிறகு என் கணவர் மதுரை கூடல் புதூருக்கு வந்துவிட்டதாக என்னிடம் சொன்னார் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். 1வது எதிரியின் மீது உள்ள தனிப்பட்ட விரோத்தை மனத்தில் வைத்துக்கொண்டு போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் ஒரு சாட்சி வேண்டுமென்பதற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரிக்கும் இறந்து போன மணி என்பவருக்கும் சிறு சிறு பிரச்சனைகள் வரும் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.